StudentBounty.com

# INTERNATIONAL INDIAN SCHOOL - DAMMAM

## SUMMATIVE ASSESSMENT - II ( 2013-2014 )

## CLASS : VIII

| | | |
|---|---|---|
| Maximum Marks : 90 | **TAMIL** | Time 3 hours |
| மதிப்பெண்கள் : 90 | **தமிழ்** | நேரம் : 3 மணி |

The question paper is diveded into four Sections.

இக்கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

| | | | |
|---|---|---|---|
| SECTION | : A | Reading Comprehension | - 10 Marks |
| பிரிவு | : அ | படித்தல் (உரைநடைப்பகுதி ) | - 10 மதிப்பெண்கள் |
| SECTION | : B | Writing | - 15 Marks |
| பிரிவு | : ஆ | எழுதுதல் | - 15 மதிப்பெண்கள் |
| SECTION | : C | Grammar | - 15 Marks |
| பிரிவு | : இ | இலக்கணம் | - 15 மதிப்பெண்கள் |
| SECTION | : D | Literature / Textbooks | - 50 Marks |
| பிரிவு | : ஈ | இலக்கியம் / தமிழ்ப்பாடநூல்கள் | - 50 மதிப்பெண்கள் |

★ எல்லா வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

★ ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மதிப்பெண்கள் அதனதன் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

★ வினாத்தாள் 5 பக்கங்களைக் கொண்டது.

### பகுதி - I

1 ) **கொடுக்கப் பட்டுள்ள பத்தியைப் படித்துக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

புறநானூறு சங்ககால அரசியல், பண்பாடு குறித்த வரலாற்றை எழுதப் பெரிதும் துணைபுரிகிறது. தமிழ் மன்னர்கள் நிகழ்த்திய போர்கள், மன்னர்களின் ஒழுக்க நிலை, தமிழ் மன்னர்களின் செயல்கள் குறித்த பல்வேறு செய்திகள் இந்நூலில் காணப்படுகின்றன. அரசன் தன் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் காவல் வீரரை வைத்திருந்தான். முறை தவறி அரசாளும் மன்னனை மக்கள் பழி தூற்றும் நிலை மிக இழிவாகக் கருதப்பட்டது.புலவர்கள் தங்கள் வறுமையை மறைக்காது வெளிப்படுத்தினர். அரசர்களுக்கும்,புலவர்களுக்கும் உள்ள உறவு நெருக்கமாக இருந்தது.சங்ககால மக்கள் சிவன்,கண்ணன்,பலதேவன்,முருகன் ஆகிய நான்கு தெய்வங்களையும் வணங்கினர்.மக்களுக்கு மறுபிறப்பில் நம்பிக்கை இருந்தது.அந்தணர்களுக்கு ஊர்களும் செல்வங்களும் தாரைவார்த்துக் கொடுக்கப்பட்டன.அரைக்கப்பட்ட மண்ணால் மதில் கட்டினர், பிணத்தை மண்தாழியில் புதைத்தனர் என்ற பல செய்திகளும் புறநானூறு நூலில் இடம்பெற்றுள்ளது.



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

<u>வினாக்கள்</u> 10

i) புறநானூறு நூலில் காணப்படும் செய்திகள் யாவை ?

ii) சங்ககாலத்தில் இழிவாகக் கருதப்பட்ட செயல் யாது ?

iii) சங்ககால மக்கள் வணங்கிய தெய்வங்களின் பெயர்களை எழுதுக.

iv) சங்ககாலத்தில் எவற்றை அந்தணர்களுக்குத் தாரைவார்த்துக்கொடுத்தனர்?

v) சங்ககால மக்கள் மண்தாழியில் வைத்து புதைத்தது

அ) பொன்னை

ஆ) ஓலைச்சுவடிகளை

இ ) வாசனைப்பொருட்களை

ஈ ) பிணத்தை

vi) சங்ககாலப் புலவர்கள் மறைக்காது வெளிப்படுத்தியது

அ) தங்கள் குலப்பெருமையை

ஆ) தங்கள் வறுமையை

இ ) தங்கள் ஆசைகளை

ஈ ) தங்கள் பொறாமையை

## பகுதி - II

2 ) பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் பொதுக்கட்டுரை எழுதுக. 8

அ ) சுற்றுபுறச்சூழலைப் பாதுகாப்போம்

ஆ ) நாட்டியப்பறவை - மயில்

இ ) கணினியின் பயன்கள்

3 ) நூலகம் வேண்டி நூலகத்துறை ஆய்வாளருக்கு விண்ணப்பக் கடிதம் எழுதுக. 7

( அல்லது )

மாற்றுச் சான்றிதழ் வேண்டி பள்ளி தலைமை ஆசிரியருக்கு விண்ணப்பக் கடிதம் எழுதுக.

## பகுதி - III

**4 ) சான்று தருக.** 3

**(i) இனமுள்ள அடைமொழி**

அ ) செம்பருந்து ஆ ) செந்தாமரை

இ ) கருங்காக்கை ஈ ) வெண்திங்கள்



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

(ii) **இரண்டாம் வேற்றுமை**

அ ) நாய் வந்தது ஆ ) இராஜராஜன் பெரிய கோயிலைக் கட்டினார்
இ ) மாதவன் நடனம் ஆடினான் ஈ ) காகிதத்தால ஆன கப்பல்

(iii) **மரபு வழு**

அ ) சிங்கக்குருளை ஆ ) கீரிப்பிள்ளை
இ ) மாஞ்செடி ஈ ) யானை பிளிறும்

5 ) **கோடிட்ட இடத்தை நிரப்புக.** **3**

(i) மயில் அகவும் - என்பது __________.

அ ) மரபுச்சொல் ஆ ) மரபு வழு
இ ) மரபுப் பிழை ஈ ) அடைமொழி

(ii) குமரன் சினத்தை விடுத்தான் - என்பது ________ பொருளில் வரும் வேற்றுமை.

அ ) உடைமை ஆ ) ஆக்கல்
இ ) அடைதல் ஈ ) நீத்தல்

(iii) சீராட்டிப் பாராட்டி - என்பது ____________.

அ ) இனமில்லா அடைமொழி ஆ ) இனமுள்ள அடைமொழி
இ ) நேர் இணைச்சொல் ஈ ) எதிர் இணைச்சொல்

6 ) **அடைப்புக்குறிக்குள் கூறியவாறு செய்க.** **3**

(i) **தர்மன் தம்பி பீமன் ( ஐந்தாம் வேற்றுமை உருபு சேர்த்து எழுதுக )**

அ ) தர்மனுக்கு தம்பி பீமன் ஆ ) பீமன் அண்ணன் தர்மன்
இ ) தர்மனது தம்பி பீமன் ஈ ) தர்மனின் தம்பி பீமன்

(ii) **கண்ணா வா! ( எவ்வகை வேற்றுமை இடம்பேற்றுள்ளது ? )**

அ ) ஐந்தாம் வேற்றுமை ஆ ) இரண்டாம் வேற்றுமை
இ ) மூன்றாம் வேற்றுமை ஈ ) எட்டாம் வேற்றுமை

(iii) **நாய் ஓடினான் ( வழுவின் வகையைக் கூறு )**

அ ) மரபுவழு ஆ ) பால்வழு
இ ) திணைவழு ஈ ) இடவழு

7 ) **இலக்கணக் குறிப்பு தருக.** **3**

(i) **புலவனுக்கு உரியது புலமை**

அ ) பொருட்டு பொருளில் வரும் நான்காம் வேற்றுமை
ஆ ) கொடை பொருளில் வரும் நான்காம் வேற்றுமை



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

இ ) தகுதி பொருளில் வரும் நான்காம் வேற்றுமை
ஈ ) முறை பொருளில் வரும் நான்காம் வேற்றுமை

**(ii) நேற்று கேட்பேன்**

அ ) கால வழு  ஆ ) வினா வழு
இ ) விடை வழு  ஈ ) திணை வழு

**(iii) தோய்தயிர்**

அ ) எதிர் இணைச்சொல்  ஆ ) நேர் இணைச்சொல்
இ ) அடைமொழி  ஈ ) மரபு வழு

**8 ) சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **3**

(i) அ ) அடைமொழி மூன்று வகைப்படும்.
ஆ ) அடைமொழி இரண்டு வகைப்படும்.
இ ) அடைமொழி எட்டு வகைப்படும்.
ஈ ) அடைமொழி ஐந்து வகைப்படும்.

(ii) அ ) ஒடு - என்பது இரண்டாம் வேற்றுமை உருபு ஆகும்.
ஆ) ஒடு - என்பது மூன்றாம் வேற்றுமை உருபு ஆகும்.
இ ) ஒடு - என்பது ஐந்தாம் வேற்றுமை உருபு ஆகும்.
ஈ ) ஒடு - என்பது ஏழாம் வேற்றுமை உருபு ஆகும்.

(iii) அ ) வழு என்பதற்கு குற்றம் என்று பொருள்
ஆ ) வழு என்பதற்கு மரபு என்று பொருள்
இ ) வழு என்பதற்கு ஒழுக்கம் என்று பொருள்
ஈ ) வழு என்பதற்கு பிரிவு என்று பொருள்

## பகுதி - IV

**9 ) கோடிட்ட இடத்தை நிரப்புக.** **5**

i ) சிலேடையைத் தமிழில் ________________ என்பர்.

ii ) இளம்பிறைச் சந்திரனை அணிந்தவர் _________________.

iii ) புறநானூற்றுப்பாடல்கள் சிலவற்றினை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ______ .

iv ) நாலடியார் _________________ சார்ந்ததாகும்.

v ) கட்டடக்கலையும், சிற்பக்கலையும் கொழிக்கும் ஊர் _______________.

**10 ) பொருள் தருக. ( நான்கிற்கு மட்டும் விடை தருக )** **4**

i) வேணி  ii) கோடு  iii) மடவாள்  iv ) செய்  v ) காயசித்தி  vi ) பரி



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

11 ) **எதிர்ச்சொல் தருக. ( நான்கிற்கு மட்டும் விடை தருக )** 4

i) அவல் ii ) அறம் iii ) வாட iv ) அணி v ) உருவான
vi ) நாட்டுப்புறம்

12 ) **பிரித்து எழுதுக. ( நான்கிற்கு மட்டும் விடை தருக )** 4

i) செங்கதிரோன் ii ) நன்கணியர் iii ) கோட்டுமரம்
iv ) பூம்புனல் v ) பெருமழை vi ) தாலாட்டு

11 ) **பின்வரும் வினாக்களுகளில் ஏதேனும் எட்டிற்கு மட்டும் விடை தருக.** **16**

அ) நல்ல நிலமும் தீய நிலமாகும். எப்போது ?
ஆ) வாய்மொழி இலக்கியம் என்று எதைக் கூறுவர் ?
இ) ஏழு வகை நாட்டுப்புறப்பாடல்கள் யாவை ?
ஈ) அரிவாள் எத்தகையது என்று பெண்கள் பாடுகிறார்கள் ?
உ) அதனுள் வெயில் ஒழுகும் - விளக்குக.
ஊ) தேனருவியின் அலைகளால் எவை சறுக்கும் ? ஏன் ?
எ) ஐராவதீசுவரர் கோவிலை யுனெஸ்கோ எவ்வாறு அறிவித்துள்ளது ?
ஏ) சோழ மண்டலத்தில் எக்கருவிகளின் ஒலியைக் கேட்கலாம் ?
ஐ) நான்கு மணிகளைப் போல் விளங்கும் கருத்துகள் யாவை ?
ஒ) ஐராவதீசுவரர் கோவில் சிற்பங்கள் உணர்த்தும் மூன்று கதைகள் யாவை ?

12 ) **ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் விரிவான விடை தருக.** 4

அ ) தென்னாரிய நாட்டின் சிறப்புகளைக் குறத்தி எவ்வாறு கூறுகிறாள் ?
ஆ) நல்லார் நட்பினைப் பெறுதல் பற்றி நாலடியார் கூறும் கருத்துகளை எழுதுக.

13 ) **ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் துணைப்பாடக் கட்டுரை எழுதுக.** 8

அ) பாம்புகள்.
ஆ) எது பெரிய உண்மை ?
இ) தங்கமாம்பழமும், சூட்டுக்கோலும்.

14 ) **அடிபிறழாமல் எழுதுக.** 5

**வானரங்கள்** - எனத் தொடங்கும் குற்றாலக் குறவஞ்சி பாடலை எழுதுக.



www.StudentBounty.com
Homework Help & Pastpapers